திரு. கே. டி. கே. தங்கமணி: 1970-ஆம் ஆண்டிலே ஆயிரம் டிஸ்ப்யூட்டுகள் அரசாங்கத்திற்கு வந்திருந்தும்கூட முந்நூறுக்கும் அதிகமான கேஸ்கள் எந்த முடிவுக்கும் அனுப்பப்படாமல் இருக்கிறதே, அந்தமாதிரியான நிலைமை சென்ற ஆண்டிலும் இருந்ததா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தனியாகக் கேள்வி போட வேண்டும்.

சீரணிப்படையில் பெண்கள்

*10 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு வட்டாரத்திலும், முழுவதும் பெண்களையே கொண்ட சீரணிப் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இல்லை.

திரு. பி. எஸ். மணியன்: சீரணிப்படையின் நோக்கம் முழுமையாக ஈடேற வேண்டுமென்றால் கிராமங்களில் பெண்களையே இந்தப் படையில் சேர்த்துப் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம். பரிட்சார்த்தமாகவாவது சில வட்டாரங்களில் பெண்களைக் கொண்டே இந்தப் படைகளை அமைக்க அரசு ஆலோசிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: சீரணிப் படையில்—சென்னையைப் பொறுத்தவரை 100 பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பெண்கள் இந்தச் சீரணிப்படையில் சேர 30 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது விதி. முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இந்தச் சீரணிப்படையில் சேர்ந்து பணியாற்ற அதிகமான அளவில் முன்வரவில்லை. பெண்களைக் கொண்டே சீரணிப்படையை அமைக்கும் உறுப்பினருடைய அந்த எண்ணத்தைச் சமயம் வாய்க்கும்பொழுது பரிசீலனை செய்யலாம்.

Housing schemes for Harijans

*11. *Q*---THIRU N. DENNIS: Will the Hon. the **Minister for** Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Union Government have come forward to finance the housing constructions for Harijan Colonies in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மாநிலத்திட்டவரம்பில் அரிசனங்களுக்கு வீடுகட்டித் தரும் திட்டத்திற்கான மத்திய அரசின் நிதி உதவி மாநிலத்திட்டம் முழுமைக்கும் மொத்த மானியமாகவும் மொத்த கடனாகவும் விடுவிக்கப்படுகிறது. துப்புரவுப் பணிபுரியும் அரிசனங்களுக்கு வீடுகட்டித்தரும் திட்டம் மத்திய அரசின் ஆதரவுள்ள (Centrally sponsored) திட்டம். இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகையில் மத்திய அரசின் நிதி உதவி 50 சதவிகிதம் ஆகும்.